# வஞ்சிக்கப்பட்ட வரலாறு



**பேராசிரியர் ப.காளிமுத்து** எம்.ஏ., பிஎச்.டி.,

**கட்டுரைச்சுருக்கம்**

திராவிட இனமும், தமிழ் மொழியும், பல்வேறு அரசியல் மற்றும் சமூகப் பிறழ்வுகளால், காலந்தோறும் வஞ்சிக்கப்பட்டு வந்த வரலாற்றை, விரிவாக ஆய்கிறது இக் கட்டுரை

ஒரு காலத்தில் வரலாறு என்பது மன்னர்களைப் பற்றியும் அவர்கள் நடத்திய போர்களைப் பற்றியும் வெற்றி பெற்ற நாடுகளில் அவர்கள் செய்த வேலைகளைப் பற்றியும் பேசுவதாக இருந்தது. காலப் போக்கில் வரலாறு மக்களைப் பற்றிப் பேசுவதாக மாற்றம் பெற்றது. என்றாலும் வரலாற்றில் பல 'குள்ளநரி வேலைகள்' நடந்துள்ளமையை நடுநிலை ஆய்வாளர்கள் இப்போது எடுத்துக்காட்டி வருகின்றனர்.

வரலாற்றை மறைப்பது, மாற்றுவது, திரிப்பது, பொய்யை மெய்யாக்குவது என்னும் 'திருப்பணிகள்' இந்திய வரலாற்றில் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளமையைக் காணமுடிகிறது. காரணம், வரலாற்றை எழுதியவர்கள் பெரும்பாலோர் பார்ப்பனர்களும் பார்ப்பனச் சார்புடையோருமாகவே இருந்துள்ளனர். இதற்குச் சான்றாகக் கீழ்வரும் செய்திகளைக் குறிப்பிடலாம்.

**குப்தர் காலம் பொற்காலமா?**

'குப்தர் காலம் பொற்காலம்' என்று நீண்ட நெடுங்காலமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால், குப்தர் காலத்தில்தான் பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சூத்திரர்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டது. சமஸ்கிருதத்திற்கு உயர்ந்த இடம் கொடுக்கப்பட்டு, பார்ப்பனர்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டார்கள்.[1] வரம்பு மீறிய செயல்களும் கலகங்களும், குழப்பங்களும், கொள்ளைகளும், பாலியல் வல்லுறவுகளும் குப்தர்களின் ஆட்சியில் கோலோச்சின.[2] மக்கள் சொல்லவொண்ணாத் துன்பங்களுக்கு ஆளாயினர். மவுரிய அரசனான 'பிரகத்ரதா' என்பவனை அவனுடைய படைத் தலைவனாக இருந்த 'புஷ்யமித்ர சுங்கன்' என்னும் வேதியன், படையணிவகுப்பை மன்னன் பார்வையிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவன் பின்னாலிருந்து அரசனை வெட்டிக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான்.[3] வேதியர் வீரம் பின்னாலிருந்து, மறைந்திருந்து தாக்குவது தானே!

### களப்பிரர் காலம் இருண்ட காலமா?

தமிழ்நாட்டு வரலாற்றில் களப்பிரர் காலத்தை 'இருண்ட காலம்' *(Dark Age)* என்று வரலாற்றில் பதிவு செய்துள்ளனர். ஏனென்றால், அதுவரையில் தமிழ் வேந்தர்களால் பார்ப்பனர்க்கு வழங்கப்பட்டுவந்த 'பிரம்மதேயம்' முதலான அனைத்துச் சலுகைகளையும் களப்பிரர்கள் ஒழித்துக் கட்டி விட்டார்கள் என்கிறார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி.[4]

'சங்க காலத்திற்குப் பிறகு ஆட்சியைக் கைப்பற்றிய களப்பிரர் பார்ப்பன ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பார்ப்பனரின் வேத சமயம் புறக்கணிக்கப்பட்டது. பவுத்தமும் சமணமும் களப்பிரர்களால் ஆதரிக்கப்பட்டன. பார்ப்பனர்க்கும் அவர்களின் ஆதிக்கத்தில் இருந்த கோயில்களுக்கும் அரசு வழங்கிவந்த அனைத்து உதவிகளும் நிறுத்தப்பட்டன. வேத - புராணக் கருத்துகளைக் களப்பிரர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள். பார்ப்பனரின் ஆடம்பர வாழ்க்கை ஆட்டம் கண்டது. இயற்கையோடொன்றிய தமிழ் மக்களின் எளிமையான வாழ்க்கை மீண்டும் சுடர்விடத் தொடங்கியது. தமிழ் மொழிக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டது. தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிக்காகவும் அறிவுசான்ற நூல்களை மக்களிடையே பரப்புவதற்காகவும் வச்சிரநந்தி என்னும் சமண முனிவர் கி.பி.470ஆம் ஆண்டு மதுரையில் 'திராவிடச் சங்கம்' என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். ஆங்காங்கே தமிழ்க் கல்விக் கூடங்கள் தொடங்கப்பட்டன. பார்ப்பன எதிர்ப்பு மனப்பான்மை பரவியிருந்தமையால் அவர்களின் ஆதிக்கம் களப்பிரர் காலத்தில் ஓரளவு தடைப்படுத்தப்பட்டிருந்தது' என்கிறார் பேராசிரியர் தேவநேசன்.

*"The Concessions and support rendered to the Hindu temples and Brahmins were stopped. So the fortunes of the Brahmins began to decline. They ignored Vedic and puranic principles. They prohibited their luxurious life. The simple and natural life of the Tamils once again reappeared in the society... Kalabras gave due importancee to the develop of Tamil language. In 470 A.D. Vajira (ment nandhi) founded 'Dravida Sangam' at madurai. It Contributed much for the development of Tamil literature. It led to the decline of sanskrit language. Tamil educational institutions were started.... Anti-Brahminical attitude gathered momentum. Thus during the reign of Kalabras. The Brahmin domination in Tamilnadu was to some extent Prevented."*[5]

***- Prof Devanesan,***
***History of Tamilnadu***

### டாக்டர் கே.கே.பிள்ளையின் கருத்து:

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் டாக்டர் கே.கே.பிள்ளையின் கருத்து வருமாறு:

"களப்பிரர் காலத்தில் ஆக்கத் துறைகள் பலவற்றில் வளர்ச்சி காணப்பட்டது. பவுத்தரும் சமணரும் வைதிகச் சடங்குகளையும் வேள்விகளையும் ஆரிய சமயத் தத்துவங்களையும் மறுத்தவர்கள். கொல்லாமை, புலால் உண்ணாமை, பொய்யாமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு காணாமை போன்ற உயர்ந்த அறங்களை ஓம்பி வளர்த்தவர்கள். ஆயிரம் வேள்விகள் வேட்பதினும் ஓர் உயிரைக் கொல்லாமையே மேலான அறமாம் என்று புத்தர் போதித்த அறத்தை வலியுறுத்தி வந்தனர் பவுத்தர்கள். மக்களுக்குள் ஒழுக்கத்தையும் அமைதியையும்

*பிற உயிர்கள்மாட்டு அன்பையும் வளர்ப்பதில் சமண பவுத்தத் துறவிகள் முனைந்து வந்தனர். இக்காரணங்களால் வேள்விகளையும் குலவேறுபாடுகளையும் படிகளாகக் கொண்டு உயர்ந்து வந்த வைதிக சமயம் தன் செல்வாக்கை இழந்து வந்தது. மதுரையில் வச்சிரநந்தி நிறுவிய 'திராவிடச் சங்கம்' (கி.பி.470) நீலகேசி, குண்டலகேசி, யசோதர காவியம் சீவக சிந்தாமணி ஆகிய காவியங்கள் தமிழில் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் பல இச்சங்க காலத்தில் இயற்றப் பெற்றவையாம். மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இக்காலத்தில் எழுந்தவை..... தமிழர்கள் - புறச் சமயத்தார்கள் மேற்கொண்ட தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் பாராட்டி ஏற்றுக் கொண்டனர்.*[6]

*பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி பார்ப்பனர்க்குத் தானமாகக் கொடுத்த வளம் கொழித்த ஊரான வேள்விக்குடியை களப்பிரர்கள் மீட்டெடுத்துக் கொண்டார்கள் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் தெரிவிக்கும் செய்தியை ஏற்றுக்கொள்ளும் அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அதற்கு வேறு காரணங்களைத் தேடுகிறார், களப்பிரர்கள் பார்ப்பனரை வெறுக்கவில்லை என்கிறார் அவர்.*[7]

**சோழர் காலம் எப்படி?**

மேல் எடுத்துக் காட்டியுள்ளதைப் போலவே பிற்காலச் சோழர் காலத்தையும் 'பொற்காலம்' என்று கூறுவதும் வரலாற்றை மறைக்கும் செயலாகவே தோன்றுகிறது.

*சோழர் காலத்தில் வடவரின் இலக்கியங்களும் சமயக் கருத்துகளும் பண்பாடுகளும் தமிழ்நாட்டில் பெருக்கெடுத்துப் பாயவே, அவற்றை வளர்ப்பதற்கும் மேற்கொண்டு பல புதுமைகளைப் பெருக்கிக் கொள்வதற்கும் மன்னர்கள் ஆயிரக்கணக்கில் அயல் நாட்டுப் பார்ப்பனரை இறக்குமதி செய்து கோயில்களிலும் கல்வி நிறுவனங்களிலும் அவர்களைப் பணியமர்த்தினர். வேதநெறி தழைத்தோங்குவதற்காக மன்னரும் மக்களும் புதிதாகக் குடிபுகுந்த பார்ப்பனர்க்குப் பொன்னையும் பொருளையும் குடியுரிமைகளையும் வாரி வழங்கினர். பார்ப்பனருக்குத் தனி நிலங்களும் முழுக் கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அக்கிராமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம், பிரமதேயம் எனப் பல பெயரில் வழங்கின. இக் குடியிருப்புகளில் அரசனுடைய ஆணைகள் செயல்படா... மேலும் தமிழ் மன்னரும் தமிழ் மக்களும் வரையாது வழங்கிய வாழ்க்கை நலன்களைப் பெற்ற பார்ப்பனர்கள் தனித்து வாழ்ந்து மக்களிடையே குல வேறுபாடுகளைப் பெருக்கித் தமிழரைச் 'சூத்திரர்' என்ற இழிகுலத்தினராக்கிக் கோயில்களிலும், மடங்களிலும் ஏனைய பொது அறச்சாலைகளிலும் ஒதுக்கி வைத்துவிட்டார்கள். கோயில் கருவறையில் வடமொழியின் ஆரவார ஓசை ஓங்கவும் தமிழ் ஒலி மறையவும் வழக்காறுகள் வகுக்கப்பட்டன........ ஆரியப் பழக்க வழக்கத்தைப் பாராட்டிக் கூறும் சாஸ்திரங்களும் புராணங்களும் எழுந்தன. அவற்றைப் பார்ப்பனர் பயில்வதற்கென அரசர்கள் பல கல்வி நிறுவனங்களை அமைத்துக்கொடுத்தனர். தமிழ் மக்களுக்கான கல்விக் கூடங்களைக் காணமுடியவில்லை. சோழர்களின் கல்வெட்டுகளில் ஏராளமான எழுத்துப் பிழைகளைக் காணமுடிகிறது.*[8]

பார்ப்பனரையும் வேளாளரையும் எதிர்த்துக் கலகங்கள் விளைந்துள்ளன. இவ்விரு வகுப்பாரையும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்களுக்கு இருபதினாயிரம் காசுகள் தண்டம் விதிக்கப்படும் என்றும், தண்டம்

செலுத்தத் தவறினால் குற்றவாளிகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் மூன்றாம் குலோத்துங்கனின் ஆணை ஒன்று கூறுகிறது.[9]

தஞ்சைப் பெருவுடையார் கோயில் பணிக்காக இராசராசன் நானூறு தேவரடியார்களை அமர்த்தியிருந்தான். இவர்களை வேறு கோயில்களுக்கு விற்பனை செய்யும் பழக்கமும் இருந்தது, தேவரடியார்களின் உடம்பில் குலக் குறியிடுவது வழக்கமாக இருந்தது.[10]

சோழர் காலச் சமுதாய நிலை பற்றி ஆராய்ந்த ஆங்கிலேய ஆய்வாளர் 'சர்.சார்லஸ் எலியட் என்பவர் பார்ப்பனர்கள் சோழ மன்னர்களுக்கு அறிவுரைக்கும் ஆசான்களாக இருந்தனர் என்றும், அவர்கள் அரசுக்குள் ஒரு சிறிய அரசாகத் திகழ்ந்தார்கள் என்றும் சொல்லுவது பொருத்தமன்று; அவர்கள் அரசு நாட்டின் அரசுக்கு மேற்பட்டதாக இருந்தது என்று சொல்வதே சாலப் பொருந்தும்' என்கிறார்.[11]

சோழர் காலத்தில் சமூகத்தின் உயர்ந்த இடத்தில் பார்ப்பனர்கள் வைக்கப்பட்டிருந்தனர் என்றாலும் அவர்களது ஆதிக்க மனப்பான்மை எள்ளளவும் குறையவில்லை. பட்டத்து இளவரசனாகிய ஆதித்த கரிகாலனை வஞ்சகப் பார்ப்பனர் கொலை செய்த நிகழ்ச்சியை (கி.பி.969) சிதம்பரம் காட்டுமன்னார் கோவிலுக்கணித்தாகவுள்ள உடையார்குடிக் கல்வெட்டால் அறிய முடிகின்றது. கொலை செய்தவர்கள் யார் என்பதையும் அக்கல்வெட்டு தெளிவாக உணர்த்துகின்றது.[12]

இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு, சோழர் காலம் பொற்காலம் என்று கூறுவது எவ்வாறு ஏற்புடைத்தாகும்? இப்படிப்பட்ட மறைப்பு வேலைகளும் திரிபு வேலைகளும் வரலாற்று வழிநெடுகிலும் இன்றுவரையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**திரண தூமாக்கினியும் தொல்காப்பியரும்:**

பண்டைத் தமிழ்நாட்டின் மிகச் சிறந்த ஆளுமைகளாக விளங்கியவர்கள் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் ஆவர். இவர்கள் இருவரையும் எவ்வளவு இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவு இழிவுபடுத்தி வைத்துள்ளனர். தமிழர்களுக்குக் கிடைத்துள்ள நூல்களில் தொல்காப்பியமே காலத்தால் முற்பட்டதாகும். அது தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வியல் வரலாற்றை விளக்கும் காலக் கண்ணாடியாக விளங்குகிறது. இதனை இயற்றியவர் தொல்காப்பியர்.

தொல்காப்பியத்தை எழுதியவர் தொல்காப்பியர் என்பதை அந்நூலுக்குப் பனம்பாரனார் எழுதிய முன்னுரையின் வாயிலாக அறிகின்றோம். 'தமிழகத்தில் காப்பியாறு காப்பியக்குடி, காப்பியாமூர் என ஆறு குடி ஊர்ப் பெயர்கள் வழங்கியுள்ளன. காப்பியாற்றுக் காப்பியனார் (பதிற்றுப்பத்து 4ஆம் பத்து) காப்பியர் சேந்தனார் (நற்றிணை - 246) காப்பியத் தொல்குடி (சிலப் - வரந்தரு காதை) காப்பியக்குடி (சீர்காழிக்குத் தென் கிழக்கில் உள்ள ஓர்' ஊர்) எனவரும் பெயராக காப்பியன் எனும் பெயர் மிகுந்த வழக்காறுடைய ஒரு பெயராக முற்காலத்தே வழங்கி வந்துள்ளமையை அறியலாம். எனவே, தொல்கபிலர் என்பதைப் போலத் தொல்காப்பியர்' என்பதும் இயற்பெயராக இட்டு வழங்கப் பெற்ற ஒன்றாகும்.[13] எனவே, தொல்காப்பியர் என்பது அவரது இயற்பெயர் என்பதும் அவர் எழுதிய நூல் தொல்காப்பியம் என்பதும் எளிதிற் புலனாகும். இதனைத் தொல்காப்பியத்தின் பாயிரம் (முன்னுரை) உறுதிப் படுத்துகின்றது

தொல்காப்பியரின் தோழரான பனம்பாரனார் எழுதிய பாயிரம், தொல்காப்பியரைப் பற்றிய சில செய்திகளை நமக்குத் தருகின்றது. அது வருமாறு:

"வட வேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தோடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் அய்ந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிய
பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

அதாவது வடக்கில் வேங்கட மலையும் தெற்கில் தென்குமரியும் ஆகிய இவ்விரண்டு எல்லைகளுக்குப்பட்ட, தமிழ்மொழி வழங்கும் நிலப்பகுதியே தொல்காப்பியம் செய்வதற்குத் தொல்காப்பியர் எடுத்துக்கொண்ட நாடாகும்.

மேற்கூறிய தமிழ்பேசும் நாட்டவரின் உலகியல் வழக்கையும் இலக்கிய வழக்கையும் நன்கு ஆராய்ந்து தொல்காப்பியர் தம் நூலை இயற்றியுள்ளார்.

தமிழ் எழுத்துகள் எவ்வாறு தோன்றுகின்றன. அவ்வெழுத்துகளால் உருவாகும் சொற்கள், அவை உணர்த்தும் பொருள், மக்களின் வாழ்வியல் முறைகள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து (நாடி) தொல்காப்பியர் நூல் செய்துள்ளார்.

செந்தமிழின் இயற்கைத் தன்மை பொருந்திய நிலத்து மக்களின் வாழ்வையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் விட்டுவிடாமல் பேணிக் காத்து, பிற்காலத்தவர்க்குத் தந்துள்ளார் தொல்காப்பியர்.

தமக்கு முற்பட்ட நூலாசிரியர்களின் கருத்துகளை முறைப்படி ஆராய்ந்து அவர்தம் அறிவுச் செல்வத்துடன் மக்களின் வாழ்வியல் மரபுகளையும் தொகுத்துத் தந்தவர் தொல்காப்பியர்

தொல்காப்பியர் தமது நூலை நன்கு ஆராய்ந்து குற்றமற்ற வகையில் சிறப்புடன் செய்து கொடுத்துள்ளார்.

நிலந்தரு திருவிற்பாண்டியன் அவையத்தில் தொல்காப்பியர் தமது நூலை அதங்கோட்டாசான் எனும் அறங்கூறும் சான்றோர் முன்னிலையில் அரங்கேற்றினார்.

அய்ந்திரம் எனும் கோட்பாட்டைக் கற்றுத் துறை போகியவர் தொல்காப்பியர். 'பல்புகழ் மேவிய தொல்காப்பியன்' எனத் தன்பெயர் நிறுவிய பெருமைக்குரியவர் தொல்காப்பியர்.

இவற்றைத் தவிர தொல்காப்பியரைப் பற்றிய தரவுகள் எவையும் நமக்குக் கிடைக்கவில்லை.

**உரையாசிரியர்கள்:**

தொல்காப்பியர் அய்ந்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பது மறைமலையடிகளார் கருத்தாகும்.[14] தொல்காப்பியருக்குப் பின்னர் அய்ந்தாயிரம் ஆண்டுகள் கழித்து வந்த இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு முதன்முதலாக உரை எழுதினார். இளம்பூரணருக்குப் பின் சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், முதலானோர் உரை வரைந்துள்ளனர். இவர்களில் நச்சினார்க்கினியரைத் தவிர ஏனைய உரையாசிரியர் அனைவரும் பனம்பாரனார் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ள செய்திகளை மட்டுமே கூறிச் சென்றுள்ளனர்.

நச்சினார்க்கினியர் பரத்துவாசி கோத்திரத்தில் மதுரையில் பிறந்த பார்ப்பனர். கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.[15] நச்சினார்க்கினியர் தொல்காப்பியரைப் பற்றிய புதுக்கதை ஒன்றினைப் புனைந்துரைத்துள்ளார். அக்கதை வருமாறு!

'வடதிசை தாழ்ந்து போயிற்று; தென்திசை மிக உயர்ந்து நின்றது, இதனைச் சமப்படுத்த - தேவர்கள் அகத்தியக் குறுமுனியை அனுப்பினர். அகத்தியர் புலத்தியனார் தங்கையாகிய உலோபாமுத்திரையை அவர் கொடுப்ப மணந்து கொண்டு உலோபாவை அங்கேயே விட்டுவிட்டு யமதக்கினியன் மகனாகிய திரணதூமாக்கினியை அழைத்துக் கொண்டு தென் திசைக்கு வந்து பொதிய மலையில் தங்கினார். அகத்தியர் இராவணனை இசையால் வென்றார். இராக்கதரை அங்கு வராமல் தடுத்தார். பின்னர் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியரை அழைத்து 'நீ போய் என் மனைவியைக் கொணர்க' என்றார். அதற்குத் திரணதூமாக்கினி 'எம் பெருமாட்டியை யான் எங்ஙனம் அழைத்து வருவேன்' என வினவ அதற்கு அகத்தியர் 'முன்னும் பின்னும் நாற்கோல் அளவு நீளம் விலகி நின்று அழைத்து வருக' என்றார். அங்ஙனம் அழைத்து வந்த போது, வைகையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வெள்ளம் உலோபாமுத்திரையை இழுத்துச் செல்ல உடனே திரணதூமாக்கினி மூங்கில் ஒன்றனை முறித்து விரைந்து நீட்டினார். உலோபா மூங்கில் குச்சியைப் பிடித்துக்கொண்டு கரையேறினார். நாற்கோல் அளவு குறைந்து ஒரு கோல் அளவு நெருங்கிச் சென்று உலோபா முத்திரையைத் திரணதூமாக்கினி காப்பாற்றிக் கரைசேர்த்தார். ஒரு கோல் அளவு நெருங்கிப் போனமையால் அகத்தியருக்குச் சினம் வந்துவிட்டது. உடனே இருவரையும் பார்த்து 'சுவர்க்கம் புகாமல் ஒழிவீர்' எனச் சபித்தார். உடனே திரணதூமாக்கினி, 'யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையால் எம் பெருமானும் சுவர்க்கம் புகாமல் ஒழிக' எனச் சபித்தார். இதனால் ஆத்திரமடைந்த அகத்தியர் அரங்கேற்றத்தின் போது தொல்காப்பியத்தை எவரும் செவிமடுத்துக் கேட்க வேண்டாம் என்று அதங்கோட்டாசானிடம் வற்புறுத்தினார்.[16] இவ்வாறு நச்சியின் கதை செல்கிறது.

இந்தத் திரணதூமாக்கினிதான் தொல்காப்பியர் என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பியப் பாயிர உரையில் தெளிவாகக் குறிப்பட்டுள்ளார். இக்கதை நச்சினார்க்கினியர் உரையைத் தவிர, வேறு எவர் உரையிலும் காணப்படவில்லை. இக்கதையின் வாயிலாக, யமதக்கினி முனிவரின் மகனாகிய தொல்காப்பியர் வட நாட்டிலிருந்து வந்த ஆரியப் பார்ப்பனர்; அவர் அகத்தியரின் மாணவர்; ஆரியப் பார்ப்பனர் தமிழர்களுக்குக் கொடுத்த கொடை தொல்காப்பியம்; அறிவிற் சிறந்தோர் ஆரியரே; திரணதூமாக்கினி வருவதற்கு முன்னர் தமிழ்நாட்டில் தொல்காப்பியத்தைப் போன்ற நூல்கள் இல்லை என்னும் கருத்துகளை நச்சினார்க்கினியர் நிலை நிறுத்துகிறார்.

### அரசஞ் சண்முகனார்

'தொல்காப்பியத் தொண்டன்' என்று தம்மைக் கூறிக் கொண்ட சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் தம்முடைய 'தொல்காப்பியச் சண்முகவிருத்தியின் முதலாவது பகுதியாகிய பாயிரவிருத்தி' உரையில் (1905) நச்சினார்க்கினியரின் பொய்யுரையை மெய்யுரை எனக் கருதி மயங்கினர்.

''ஆசிரியர் அகத்தியனார் மாணாக்கர் பன்னிருவருள்ளும் சிறந்தாரும் சமதக்கினி முனிவர்க்கு மகனாரும் திரணதூமாக்கினி என்னும் இயற்பெயருடையாரும்..... அய்ந்திர நிறைந்தாருமாகிய ஆசிரியர் தொல்காப்பியனார் என்றும், அகத்தியனார் வழித் தோன்றிய ஆசிரியர்

எல்லாருள்ளும் தொல்காப்பியனாரே தலைவர் என்பதும்.... என்றும் அரசஞ் சண்முகனார் குறிப்பிடுவதனால் அவர் நச்சினார்க்கினியரின் கதையை அப்படியே ஏற்றுக் கொள்கிறார் என்பது தெளிவாகிறது.

திரணதூமாக்கினி எனும் இயற்பெயருடைய வட நாட்டுப் பார்ப்பனர் எழுதியது எப்படித் தொல்காப்பியமாகும் அது 'திரணதூமாக்கினியம்' என்றல்லவா பெயர் பெற்றிருக்க வேண்டும்? மேலும் அகத்தியனாரின் மாணவர் தொல்காப்பியர் என்பதற்கான சான்று எதுவுமே இல்லை. தொல்காப்பியர் எந்த இடத்திலும் அகத்தியர் பெயரைக் குறிப்பிடவே இல்லை. தமிழ்நாட்டில் அறிவிற் சிறந்து விளங்கிய சிந்தனையாளர்களையும் சான்றோர்களையும் பார்ப்பனர் தம்மவர்களாக்கிக் கொள்வார்கள் என்பதற்கு நச்சினார்க்கினியரின் இப்புனைகதை ஒரு சிறந்த சான்றாகும். ''மேலும் அப்பெருந் தமிழ் முனிவரை வடவராக்க முயன்று கட்டிய கதைகள் வாய்மையுடையனவாகா. மேலும் சமதக்கினியார் மகனார் என்றும் பரசுராமனின் உடன் பிறந்தார் என்றும் கூறுவர். பரசுராமர் காலத்துக்கும் தொல்காப்பியர் காலத்துக்கும் இடைப்பட்ட காலம் பல ஆயிரம் ஆண்டுகளாகும் அதனாலும் அக்கதை பொருந்தாப் புனைவென்பது தேற்றம்'' என்னும் தொல்காப்பிய அறிஞரின் கூற்றும் ஈண்டு நோக்கத் தக்கதாகும்.[18]

### இடைச் செருகல் வேலைகள்

தொல்காப்பியரை வடக்கிலிருந்து வந்தவர் என்றும் ஆரியப் பார்ப்பனர் என்றும் நிலை நிறுத்தும் முயற்சிகள் ஒரு புறத்தில் நடந்துவந்த நேரத்தில் மறு புறத்தில் தொல்காப்பியத்திற்குள்ளேயே கைவைத்து விட்டார்கள். தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபட்ட செய்திகளை இடைச் செருகல் செய்து அவரது கருத்தை மாசுபடுத்தும் முயற்சி நடைபெற்று வந்துள்ளது.

தொல்காப்பியர் தம் கருத்துகளை நிரல்பட மொழியும் பெற்றியர், தொல்காப்பியத்துள் எந்த இடத்திலும் முன்னுக்குப் பின் முரண்படும் கருத்துகளைக் காண இயலாது. அப்படி ஏதாவது வருமாயின், அது இடைச் செருகல் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

எழுத்தெனப் படுப
அகரமுதல னகர இறுவாய்
முப்ப ஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே'

அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன'

அவற்றுள்
அ இ உ எ ஒ என்னும்
அப்பால் அய்ந்தும்
ஓரளபிசைக்கும் குற்றெழுத்தென்ப

ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்ப[19]

என்று எழுத்துகளை நிரல்பட வைக்கிறார் தொல்காப்பியர். அகத்திணை இயலில் முதல் கரு உரிப்பொருள்களைப் பற்றிப் பேசுமிடத்திலும் இந்த வரிசை முறையைக் காணலாம். முதற்கண் முதற்பொருளைக் கூறுவார். 'முதல் எனப்படுவது நிலம் பொழுதிரண்டின் இயல்பென மொழிப' என்று கூறிவிட்டு அடுத்து நிலத்தைப் பற்றியும் அதற்கடுத்துக் காலத்தைப் (பொழுது) பற்றியும் நிரல்படக் கூறிச் செல்லும் நெறியே தொல்காப்பிய நெறியாகும்.''[20] ஆனால், மரபியலில் கருப்பொருள்களான மரம், செடி, கொடி, விலங்கு, பறவை ஆகியவற்றின் இளமைப் பெயர்களையும் ஆண்பாற்பெயர்களையும்

பெண்பாற்பெயர்களையும் தொல்காப்பியர் வரிசையாகப் பட்டியலிடுகிறார். இவற்றை நிரல்பட அடுக்கிவந்த நிலையில் திடீரென்று,

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"[21]

என்று தடம் மாறுவதைக் காண்கிறோம். அதாவது பூணூலும் கமண்டலமும் தண்டும் மணையும் அந்தணர்க்குரியவையாகும். படையும் கொடியும் வெண்கொற்றக் குடையும் முரசும் குதிரையும் பட்டத்து யானையும் தேரும் அடையாள மாலையாகிய தாரும் மணிமுடியும் அரசர்க்கு உரியவையாகும். அந்தணர் அரசர்க்குரிய அனைத்தையும் பெறுதற்கு உரியவர், வைசிகனுக்கு வாணிக வாழ்க்கை உரியது. வேளாண் மாந்தர்க்கு உழுதொழில் தவிர வேறு உரிமை இல்லை. வில்லும் வேலும் தேரும் தாரும் வானம் குதிரையும் இழிந்தோர்க்கு இல்லை[22] என்று பதினைந்து நூற்பாக்களில் மரபியலுக்கு மாறான கருத்துகள் இடைச் செருகலாக நுழைக்கப்பட்டுள்ளன.

மக்களை நிலவகையாற் பகுத்துரைப்பதன்றி நிறவகையாகிய வருணத்தாற் பகுத்துரைக்கும் நெறியினைத் தொல்காப்பியனார், மக்களுக்குரிய ஒழுகலாறுகளை விரித்துரைக்கும் முன்னைய இயல்களில் யாண்டும் குறிப்பிடவே இல்லை. இளமை, ஆண்மை, பெண்மை முதலியன காரணமாகத் தம் காலத்திற் பயின்று வழங்கிய மரபுப் பெயர்களைத் தொகுத்துணர்த்தும் முறையிலேயே ஆசிரியர் இம் மரபியலை அமைத்துள்ளார். இம் மரபியலில் 1-முதல் 70-வரையுள்ள சூத்திரங்களும் 86-முதல் 90-வரையுள்ள சூத்திரங்களும் இம் மரபினையே தொடர்ந்து விரித்துரைக்கின்றன. இயல்பாக அமைந்த இத்தொடர்பு இடையறவுபட்டுச் சிதையும் நிலையில் நான்கு ஜாதிகளைப் பற்றிய 15 சூத்திரங்கள் (71-85) மரபியலின் இடையே புகுத்தப்பட்டுள்ளன. மக்களை வேளாண் மாந்தர் என்றோ வைசியர் என்றோ வருணம் பற்றித் தொல்காப்பியர் யாண்டும் குறிப்பிடவே இல்லை. மரபியலில் இடம் பெற்றுள்ள 'வைசியன்' என்ற சொல் சங்கச் செய்யுட்களில் யாண்டும் வழங்கப்படாத பிற்காலச் சொல்லாகும். வருணம் நான்கு என்ற தொகை தொல்காப்பியத்தில் யாண்டும் சுட்டப்படவில்லை. 'வேளாண் மாந்தர்' என்றொரு குலப்பிரிவு தொல்காப்பியரால் முன்னைய இயல்களில் குறிக்கப்பெறவில்லை. ஆகவே 71 முதல் 85 வரையுள்ள இச்சூத்திரங்கள் நால்வகை வருணப் பாகுபாடு தமிழ்நாட்டில் வேரூன்றத் தொடங்கிய பிற்காலத்தில் இம் மரபியலில் இடைச் செருகலாக நுழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ் மக்களது உரிமை உணர்வினைச் சிதைக்கும் நோக்கத்துடன் இத்தகைய அடிமைக் கருத்துகள் தமிழ் நூல்களில் ஆங்காங்கே இடம் பெறலாயின"[23] என்று,

பேராசிரியர் வெள்ளை வாரணனார் மரபியலில் இடைச்செருகல் வந்த வரலாற்றை விளக்குகிறார்.

மரபியலின் இடையில் மட்டுமல்லாது அதன் இறுதிப் பகுதியில் வரும் 'நூல் மரபு' என்பதும் பிற்காலத்தவர் எவரோ எழுதி மரபியலின் இறுதியில் சேர்த்து விட்டதாகும். குலமரபு பற்றி வருவனவும் நூல்மரபு பற்றி வருவனவும் இடைச் செருகல்களே என்பது தொல்காப்பியத்தை அய்யமற ஆழமாகப் பயின்ற அறிஞர் முடிபாகும்' என்கிறார் பேராசிரியர் தமிழண்ணல்.[24]

கனலுக்கும் கரையானுக்கும் இரையானவை, ஆடிப்பெருக்கில் ஆற்றில் விடப்பட்டவை - என்று அழிக்கப்பட்ட தமிழ்ச் செல்வங்கள் எத்தனை எத்தனையோ! எஞ்சியிருந்தவற்றில் இடைச் செருகல் செய்தும் திரித்தும் மறைத்தும் அழித்தும் வந்தேறிகள் செய்த வஞ்சக வேலைகளை எழுதினால் அது ஒரு வரலாற்றுத் தொடராக விரியும்.

''நம்பழந்தமிழ்இலக்கியங்கள்ஏராளமான இடைச் செருகலை ஏற்றுக் கொண்டு உயிர் வாழ்கின்றன. எந்தெந்த நூல்களில் இடைச் செருகல் செய்ய முடியவில்லையோ அந்த அந்த நூல்களையெல்லாம் மேலோரும் நூலோரும் ஆனவர்கள் மிகவும் கரவான செயல்முறைகளைப் பின்பற்றி அழித்து ஒழித்துள்ளனர். எந்தெந்த நூல்களில் இடைச் செருகல் செய்ய முடிந்ததோ அந்த அந்த நூல்களை அந்த இடைச்செருகல்களுக்காகவே அனுமதித்துள்ளனர், பரிமேலழகர் அங்கங்கே விதைத்த நச்சுக் கருத்துகளைக் காப்பதற்காகத்தான் திருக்குறளைக் கூட இவர்கள் அழிக்காமல் விட்டனர்''[25] என்னும் கோவை இரணியனின் கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

தொல்காப்பியத்தை அறிவியல் அடிப்படையில் அமைத்திருக்கிறார் தொல்காப்பியர். உண்மைத் தரவுகளைத் தேடி ஊரெல்லாம் சுற்றியிருக்கிறார். தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்று தமிழ் மக்களின் வாழ்க்கையை உற்று நோக்கி, உண்மையறிந்து, சரியான தரவுகளைச் சேகரித்து, தமிழ்மொழியின் கட்டமைப்பையும் தமிழ் மக்களின் அகப்புற வாழ்வையும் ஆவணப் படுத்தியிருக்கிறார் என்பதைப் பனம்பாரனார் பாயிரம் உறுதிப்படுத்துகிறது. உண்மைத் தரவுகள் அடங்கிய ஒரு மாபெரும் கருத்தைத் தொல்காப்பியர் தமிழ் மக்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறார்.[26] இத்தகைய வளமான வரலாற்றுச் சிறப்புடைய தமிழ்ச் சான்றோராகிய தொல்காப்பியரை வடவர் என்றும், ஆரியர் என்றும், திரணதூமாக்கினி என்றும் வஞ்சக மொழிகளால் மறைக்கத் துடிக்கும் வந்தேறிகளின் சூழ்ச்சியை ஆராய்ச்சி உலகம் ஒருபோதும் ஒப்பாது. இன்றளவும் தொல்காப்பியம், தன் வீச்சால் தமிழுக்கு ஒளிபாய்ச்சி வருகின்றது.

**அகத்தியர் கதை**

அகத்தியரைப் பற்றிப் பல கதைகள் வழங்கிவருகின்றன. 'ஒரு சமயம் இமயமலையில் சிவபெருமான் திருமணம் நடைபெற்றது. விழாவைக் காணத் தேவர்களும் மக்களும் வந்து குவிந்தனர். அதனால் நிலத்தின் வட பகுதி பாரம் தாங்காமல் தாழ்ந்தது. தென்பகுதி உயர்ந்தது. அதைக் கண்ட சிவன் சிந்தித்தவண்ணம் அருகிலிருந்த குடம் ஒன்றைத் திறந்தார். அதிலிருந்து ஒரு மனிதன் வெளிப்பட்டு வணங்கி நின்றான். அவனுக்குத் தமிழ் முதலிய மொழிகளைக் கற்றுக் கொடுத்துத் தென்பகுதிக்குச் சென்று பூமியின் நிலையைச் சமப்படுத்தும்படி அனுப்பிவைத்தார். அம் மனிதன் அகத்தியன் எனப்படுகிறான்.[27] உடனே அகத்தியர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு பின்னர் யமதக்கினியாருழைச் சென்று.... என்று நச்சினார்க்கினியார் கூறும் கதை ஒன்று!

வடக்கிலிருந்து வந்த அகத்தியர் குடகு மலைக்கண் அமைதியாக அமர்ந்திருந்த காலத்தில் காகம் ஒன்று வந்து அவர் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டது, கமண்டலத்திலிருந்த நீர் பெருக்கெடுத்து ஓடியது, அதுவே காவிரி எனப்பட்டது என்று ஒரு கதை!

1915ஆம் ஆண்டில் 'சுதேச கீதங்கள்' என்னும் தலைப்பில் பாரதி பாடிய பாடல் அகத்தியர் யார் என்பதை ஒளிவு மறைவின்றிக் கூறுகிறது.

"ஆதி சிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்து - நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்...
ஆன்ற மொழிகளினுள்ளே - உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்"

இப்பாடலில் சிவபெருமான் தமிழைப் பெற்று அதை அகத்தியன் என்னும் ஆரியப் பார்ப்பனரிடம் (வேதியன்) கொடுக்க, அவர் மகிழ்ச்சியடைந்து தமிழுக்கு இலக்கணம் செய்து கொடுத்தார். அதனால் ஆரிய மொழியாகிய சமற்கிருதத்திற்கு நிகரெனத் தமிழ் வாழ்ந்ததாகப் பாரதி குறிப்பிடுகிறார். பிறிதோரிடத்தில், "தமிழ் மொழிக்கு முதன்முதலாக இலக்கணம் அகத்தியராலும் அவருடைய 'சிஷ்யராகிய' திரணதூமாக்கினி என்ற ஆரிய முனிவராலுமே சமைத்துக் கொடுக்கப்பட்டது என்பது மெய்யே என்றும், அது முதல் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் சமஸ்கிருத இலக்கணத்தை அனுசரித்தே சமைக்கப்பட்டிருக்கிறதென்பதும் மெய்யே"[28] என்று பாரதி எழுதுகிறார்.

ஒருமொழியை எந்தவொரு தனிமனிதனும் படைத்து வளர்த்தெடுக்க முடியாது. மொழியின் படிநிலை வளர்ச்சிக்கு முரணான இக் கருத்தை ஆரியம் தொடர்ந்து பேசி வருகிறது. ஒருமொழியின் தோற்றமும் வளர்ச்சியும் மக்கட் சமூகத்தின் கைககளில்தான் இருக்கிறது. கடவுளரால் ஒரு மொழி படைக்கப்பட்டது என்பதை அறிவுலகம் ஏற்பதில்லை. தமிழை ஆதிசிவன் பெற்றுவிட்டான், அகத்தியன் அதற்கு இலக்கணம் வரைந்தான் என்னும் ஆரியக் கருத்துகளை மொழியியல் முற்றாகப் புறந்தள்ளுகிறது. தமிழ் இலக்கணம், சமற்கிருத இலக்கணத்தை அனுசரித்தே அமைக்கப்பட்டிக்கிறது' என்னும் பாரதியின் கருத்து, தமிழ் இலக்கணத்தின் இயற்கைத் தன்மையை அறியாது கூறியதாகும். மேலும் தொல்காப்பியர் அகத்தியத்தை முதனூலாகக் கொண்டார் என்பது தமிழ் அறிவுலகத்தை இழிவுபடுத்தும் செயலாகும். தொல்காப்பியர் தமக்கு முன்பிருந்த புலமைச் சான்றோர்களை 'யாப்பறி புலவர்' 'என்மனார் புலவர்' 'உயர்மொழிப் புலவர்' 'தோலென மொழிப தொன் மொழிப்புலவர்' 'என்ப' 'மொழிப' என்று 250க்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடுகிறார். ஆனால், அகத்தியர் பெயர் எவ்விடத்திலும் இல்லை.

### மூன்று சங்கங்கள்:

முச்சங்கம் பற்றி விரிவாகப் பேசும் நூல் 'இறையனார் அகப்பொருள் உரை' என்னும் நூல்தான். முதற்சங்கம் தென்மதுரையில் 4440 ஆண்டுகள் இருந்தது என்றும், அதில் அகத்தியரும் சிவன், முருகன் முதலான கடவுளரும் 540 புலவர்களும் வீற்றிருந்து தமிழாய்ந்தனர் என்றும் இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. இவர்களுக்கு அகத்தியரின் அகத்தியமே இலக்கண நூலாக விளங்கியது.

இடைச் சங்கம் கபாடபுரத்தில் செயல்பட்டது. இச்சங்கத்தில் கடவுளரைக் காணவில்லை, அகத்தியரோடு தொல்காப்பியர் முதலாக 59 பேர் இருந்தனர், 3700 புலவர்கள் தமிழாய்ந்தனர். இவர்களுக்கு அகத்தியமும் தொல்காப்பியமும் இலக்கணநூல்களாக விளங்கின, கபாடபுரம் கடல் கோளுக்கு இரையானது.

கடைச் சங்கம் மதுரையில் அமைந்திருந்தது. (கடைச் சங்கத்திலும் கடவுளரைக் காணமுடியவில்லை.) 449 புலவர் தமிழாய்வு செய்தனர். அகத்தியமும் தொல்காப்பியமும் இவர்களுக்கு இலக்கண நூல்களாக இருந்தன.[29] இவ்வாறு இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. இவற்றில் பலசெய்திகள் நம்பத்தகுந்தனவாக இல்லை.

கடைச்சங்கம்வரைதொல்காப்பியத்தோடு அகத்தியம் தொடர்ந்து வந்தது. அதன்பிறகு திடுமென அகத்தியத்தைக்

காணமுடியவில்லை. தொல்காப்பியம் மட்டும் இடைச் செருகல்களோடு இன்றும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது. அகத்தியம் அழிந்து போயிற்று என்கிறார்கள். தமிழ் நூல்களையெல்லாம் தேடித்தேடி அழித்தவர்கள், 'அகத்தியன் என்றோர் ஆரிய மைந்தன்' எழுதிய நூலை அழிய விட்டிருப்பார்கள் என்பதை ஏற்க முடியவில்லை.

ஆரிய மைந்தராகிய அகத்தியர் பொதிய மலைக்கண் அமர்ந்து பன்னிரு மாணவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார் என்பர்.

''இனி ஆசிரியர் அகத்தியனார்க்கு மாணவர் பன்னிருவர். சமதக்கினி யிருடியின் புதல்வருள் ஒருவனும் பரசுராமன் சோதரனுமாகிய திரணதூமாக்கினியென்னும் இயற்பெயருடைய தொல்காப்பியனும் அதங்கோட்டாசானும் செம்பூட்சேயும் பனம்பாரனும் அவிநயனும் காக்கை பாடினியும்....... எனப் பன்னிருவர்..." அவர்களுள் தலைசிறந்தவர் திரண தூமாக்கினியாகிய 'தொல்காப்பியர்' என்கிறார் அரசஞ் சண்முகனார்.[30]

தொல்காப்பியருடன் பயின்ற பனம்பாரனார், தாம் எழுதிய பாயிரத்தில் தொல்காப்பியரைப் 'பல்புகழ் நிறுத்த படிமையோன்' என்று புகழ்ந்து பேசுகிறார். ஆனால், பாயிரத்தில் தங்கள் ஆசிரியர் என்று கூறப்படும் அகத்தியரைப் பற்றியோ தொல்காப்பியரின் உடன்பிறப்பாகிய பரசுராமனைப் பற்றியோ ஒரு சொல்லேனும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, எத்தனை எத்தனைப் பொய்யுரைகள்! இவை அனைத்தையும் உடைத்தெறிகிறார் புரட்சிக் கவிஞர்.

**அகத்தியன் விட்ட புதுக்கரடி:**

அகத்தியரைப் பற்றிய கதைகள் இவ்வாறு பலவாக இருக்கும் நிலையில் புரட்சிக் கவிஞர் அகத்தியரை ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பின் ஒரு குறியீடாகவே கருதுகிறார். செல்வம் முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயனால் சேர்வது; சிறுமை முற்பிறப்பிற் செய்த தீவினைப் பயனால் வருவது; ஆன்மா என்றும் அழியாதது; ஊழ்வினைதொடர்ந்துவரும்; மந்திரங்களால் வானவர் மகிழ்ச்சியடைவர். தீ ஒரு தெய்வம்; செம்புனல் ஒரு தெய்வம்; காற்றும் தெய்வம்; நிலம் ஒரு தெய்வம். தெய்வம் அழிப்பது; இந்திரன் தெய்வம்; மந்திர வேள்வியால் இந்திரன் மகிழ்வான்' என்று அகத்தியன் அளந்ததையெல்லாம் அரசன் 'ஆம் ஆம் ஆம்' என்று தலையாட்டினான்.

"அகத்தியன் அரசனே ஆகிவிட்டான்
அரசனும் அகத்தியன் அடிமையானான்
தமிழர் கலை பண்பு ஒழுக்கம் தகர்ந்தன
பழந்தமிழ் நூல்கள் பற்றி எரிந்தன,''

என்று தமிழர் கலை, பண்பு ஒழுக்கம் தகர்க்கப்பட்ட வரலாற்றையும் பழந்தமிழ் நூல்கள் எரிக்கப்பட்டதைப் பற்றியும் புரட்சிக் கவிஞர் விளக்கிப் பாடுகிறார்.

'குள்ளனை நம்பாதே' என்னும் பழமொழி தமிழ்நாட்டில் என்று எப்படி வந்தது என்பதைப் புரட்சிக் கவிஞர்,

"அகத்தியக் குள்ளன் ஆரியர் கொள்கையைப்
புகுத்தினான் செந்தமிழ்ப் பொன்னாடதனில்
அதனால் குள்ளனை அணுவும் நம்பாதே
என்ற பழமொழி அன்று பிறந்தது"[31]

என்று தெளிவுபடுத்துகிறார்.

**பழந்தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு அழிக்கப்பட்டன?**

தமிழ்த் தொல்லிலக்கியங்கள் அழிக்கப்பட்ட முறைகளையும் எஞ்சிய இலக்கியங்களில் ஆரியக் கருத்துகள்

எவ்வாறு நுழைக்கப்பட்டன என்பதைப் பற்றியும் பெரியார் விளக்குகிறார்:

*"நமது பண்டைய பெருமையான ஏடுகள் அழிக்கப்பட்டன, ஆற்றில் எறியப்பட்டன. மிஞ்சியிருப்பவைகளுக்குப் பார்ப்பானே அர்த்தமும் விளக்கமும் எழுதி வந்து விடுகிறான் அவன் நீதி சொன்னால், "பகவான் சொன்னார்; அசரீரி சொல்லிற்று; பார்வதிக்குப் பரமசிவன் சொல்ல அதை நந்தி கேட்டிருந்து நாரதரிடம் கூற நாரதர் ரிஷியிடம் சொல்ல அதைத் தேசியப் பாஷையில் பிராமணோத்தமர்களுக்குக் காதில் கூற, அதற்கு நான் அர்த்தம் கூறுகிறேன், இதை நம்பு; இல்லாவிடில் நரகம் என்று எழுதி விடுகிறான்."*[32]

என்றும், 1958ஆம் ஆண்டு வள்ளுவர் விழாவில் பேசும் போது, *"இருந்த இலக்கியங்களையெல்லாம் ஆடிப் பெருக்கில் விட்டுவிட்டோம். ஒன்றிரண்டு மிஞ்சியிருந்தது என்றால் அதைப் பார்ப்பனர்களிடத்திலே கொடுத்து அர்த்தம் சொல்" என்று தந்தோம். அவர்கள் எவ்வளவு மாற்றி அர்த்தமும் விளக்கமும் சொல்லித் தங்கள் கருத்துகளைப் புகுத்த முடியுமோ அப்படிப் புகுத்திவிட்டார்கள். மற்றபடி நமக்குப் பயன்பட இன்று வேறு ஒன்றுமே தோன்றவில்லை."*[33]

என்றும் பெரியார் தமிழ் இலக்கிய வரலாற்றில் நடந்த வஞ்சக வேலைகளை எடுத்துக் காட்டுகிறார். 'தமிழரின் ஆதிநூல் என்று சொல்லப்படும் தொல்காப்பியத்திலேயே ஆரியம் புகுந்துவிட்டது ('விடுதலை' - 19.04.1951) என்றும், அது புலவர் கையிலும் பட்டதாரி கையிலும் சிக்கியதே தவிர பாட்டாளிகள் கையில் சிக்கவில்லை' அதனால் அதில் ஆரியம் புகுந்துவிட்டது என்றும் பெரியார் கருதுகிறார். ('விடுதலை' - 03.09.1956)

இத்தகைய முடிவிற்குப் பெரியார் வருவதற்கான காரணங்களை நாம் ஆராய வேண்டும்.

## தொல்காப்பிய உரையாசிரியர்கள் செய்த குழப்பங்கள்:

தொல்காப்பியம், கற்பியலில் வரும் சில நூற்பாக்களுக்கு உரையாசிரியர்கள் கொடுத்துள்ள விளக்கங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துவனவாக உள்ளன.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
அய்யர் யாத்தனர் கரணம் என்ப"
(தொல், கற்பியல்-4)

என்னும் நூற்பாவில் வரும் 'அய்யர்' என்பதற்கு 'முனைவர்' என்று இளம்பூரணர் பொருள் கூறுகிறார். ஆனால் நச்சினார்க்கினியர் இருடிகள் (பார்ப்பனர்) என்றும், 'என்ப' என்பது வட நூலாசிரியரைக் குறித்தது என்றும் பொருள்கூறுகிறார். மேலும் கற்பு என்பதற்கு 'கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது வேள்விச் சடங்கோடுகூட, ஒத்த குலத்தோனும்மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன் ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தோளுமாகிய தலைவியைக் கொடுத்தற்குரிய முறைமையினையுடைய இரு முது குரவர் முதலாயினோர் கொடுப்பக் கொள்வது[34] என்று ஆரிய உணர்வோடு உரை எழுதுவதைக் காண முடிகிறது.

தொல். கற்பியல் நூற்பா(4)வில் வரும் 'அய்யர் என்ற சொல் பார்ப்பனர் என்னும் குலத்ினரைக் குறித்து அக்காலத்தில் வழங்கப்பெறவில்லை என்பது தெளிவு. 'அய்யர்' என்னும் சொல் தலைமைச் சிறப்புடைய பெரியோர்களைக் குறித்து வழங்கும் தனித்தமிழ்ச் சொல்லாகும்,.... அய்யர் என்னும் இச்சொல் இங்குத் தமிழின் முதல்வராகிய முன்னோரைக் குறித்து வழங்கப் பெற்றதாகும்.

'என் ஐ முன் நில்லன்மின் தெவ்வீர்,
பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர்'
(குறள்-771)

என்றும், என் ஐ புற்கை யுண்டும் பெருந்தோளன்னே' (புறம்-84) என்றும் வரும் தொடர்களில் 'என் ஐ என்பது என்னுடைய தலைவன் என்ற பொருளில் வழங்குவதனை அறிஞர் பலரும் நன்குணர்வர், இத்தகைய 'ஐ' என்பதன் அடியாக 'அர்' விகுதி பெற்ற பலர்பாற் பெயர் 'ஐயர்' என்னும் தமிழ்ச் சொல்லாகும், 'ஐ' வியப்பாகும்' என்பது தொல்காப்பியம், மக்களைத் தீநெறியினின்றும் விலக்கி நன்னெறியிற் செலுத்தவல்ல பேரறிவும் பேராற்றலும் நல்லொழுக்கமும் உடைமையால் யாவரும் வியந்து பாராட்டும் தலைமைச் சிறப்புடைய சான்றோர்களை 'ஐயர்' எனப் போற்றும் மரபுண்மை இதனால் புலனாகும்[35] என்று அறிஞர் வெள்ளை வாரணனார் இக்கருத்தை நிறுவுகிறார். மேலும் பார்ப்பனரைப் 'பார்ப்பனர்' என்றே தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரமும் குறிப்பிடுதல் காணலாம்.

இவ்வாறு 'ஐயர் யாத்த கரணம்' என்று வரும் இடங்களில் எல்லாம் நச்சினார்க்கினியர் ஆரியக் கருத்துகளை அள்ளித் தெளித்து தம் வைதிக வெறியை வெளிப்படுத்துவதை வெள்ளைவாரணனார் அம்பலப்படுத்துகிறார்:- 'அவரது (நச்சியின்) உள்ளத்தில் ஊறிய வைதிகச் சடங்கினை வெளிப்படுத்தியதாகுமே யன்றி அவர்க்குப் பன்னூறாண்டு முற்பட்ட தொல்காப்பியனார் கருத்தை வெளிப்படுத்தியதாகாது.' என்கிறார் வெள்ளைவாரணனார்.[36]

### 'கரணம்' என்பது என்ன?

'கரணம்' என்பது திருமண நிகழ்வு; களவு வாழ்க்கை முடிந்து கற்பு வாழ்க்கை தொடங்குவதற்கு முன் நடைபெறும் நிகழ்வு இது. ஓர் ஆணும் (தலைவனும்) பெண்ணும் (தலைவியும்) உலகத்தார் அறிய மனையறம் நிகழ்த்துவதற்கு உரிமை செய்தளிக்கும் செயல்முறைகளே பண்டைத் தமிழர் மேற்கொண்டொழுகிய திருமணச் சடங்காகும். இதனைக் 'கரணம்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார், காதலர் இருவரும் 'ஈருடல் ஓருயிர்' எனப் பிரிவறியா நட்புடையர் என்பதனை வலியுறுத்தி உறுதிப்படுத்துவது இத்தகைய திருமணச் சடங்காகிய கரணமே ஆதலின் இந்நிகழ்ச்சி நடைபெறாது போமாயின் அவ்விருவரது வாழ்க்கையிலும் மரணத்தையொத்த பெருந்துன்பம் நேரும் என்பது உறுதி. அதனால் 'கரணம் தப்பினால் மரணம்' என்னும் பழமொழி இன்றுவரை நின்று நிலைத்து வழங்கப்பெற்று வருகின்றது. ஆயினும் 'கரணம்' என்பதன் பொருளை அறியாது இக்காலத் தமிழர் 'குன்று முட்டிய குருவியைப் போல இடர்ப்பட்டு வருகின்றனர், மன்றல், திருமணம், வாழ்க்கைத் துணையேற்பு, வாழ்க்கை ஒப்பந்தம், இணையேற்பு எனப் பல்வேறு பெயர்களால் 'கரணம்' இக்காலத்தே அழைக்கப்படுகின்றது.

பார்ப்பன உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் குறிப்படுவதைப் போல வேள்விச் சடங்கு செய்து வேதியர் முன்னிலையில் தீவலம் வந்து செய்து கொள்ளும் திருமணச் சடங்குகள், தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் தமிழர்க்குரியனவாக யாண்டும் கூறப்படவில்லை. ஆரிய வேதங்களில் கூறப்படும் வேள்விச் சடங்கு வேறு; பண்டைத் தமிழர் மேற்கொண்டு நிகழ்த்திய திருமணச் சடங்காகிய கரணம் வேறு. இதனால் நச்சினார்க்கினியரின் 'வேத வெறியுணர்ச்சியை' நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழரின் 'கரணத்தை' ஆரியரின் வேதங்களோடு இணைத்து உரை கூறுவது வரலாற்றை வஞ்சிப்பதாகும்.

### மேலோர் மூவர் யாவர்?

வளம் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய பொழில்கள் சூழ்ந்த தமிழ்நாட்டை ஆண்டு

வந்த புகழ் வாய்ந்த மூவேந்தரை (சேர, சோழ பாண்டியரை) 'மூவர்' என்ற சொல்லால் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார், (வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" - தொல் - செய்- 75). பிறிதோரிடத்தில் போந்தை வேம்பே ஆர் என வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல் - புறத் - 5 ) - என்று மூவேந்தரை 'மாபெருந் தானையர்' என்ற தொடரால் குறிப்பிடுகிறார்.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் வகுத்தளித்த திருமண நிகழ்முறையாகிய 'கரணம்' என்பது முதன்முதலில் நாடாளும் மேன்மையுடையோராகிய முடிவேந்தர் மூவர்க்கும் வகுக்கப்பெற்று, பின்னர் அவர்களின் கீழ் வாழ்ந்த குடிமக்களுக்கும் உரியதாய் அமைந்தது என்கிறார் தொல்காப்பியர்.

'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே"
(கற்பியல் 3.)

என்பது தொல்காப்பியம், இதற்கு உரை வரைந்த இளம்பூரணர் "மேற்குலத்தாராகிய அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூன்று வருணத்தார்க்கும் புணர்த்த கரணம் கீழோராகிய வேளாண் மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு' என்று எழுதுகிறார். நச்சினார்க்கினியர் "வேதநூல்தான் அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூவர்க்கும் உரியவாகக் கூறிய கரணம் (கீழோர்க்கு ஆகிய காலமும்) அந்தணர் முதலியோர்க்கும் மகட்கொடைக்குரிய வேளாண் மாந்தர்க்கும் தந்திர மந்திர வகையால் உரித்தாகிய காலமும் உள'' என்று கூறுகிறார். இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் வருணக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே உரையெழுதிச் சென்றுள்ளனர். நச்சினார்க்கினியர், திருமண நிகழ்வாகிய கரணத்தை வேதத்தோடு தொடர்பு படுத்துகிறார். இவர்கள் இருவருமே தொல்காப்பியர் காலத்திற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வந்தவர்கள், தொல்காப்பியர் காலத்தில் இல்லாத வருணப் பாகுபாடு இவர்கள் காலத்தில் செல்வாக்குப் பெற்றுவிட்டது. ஆதலின் இவ்வுரையாசிரியர்களின் கருத்து நால்வருணப் பாகுபாட்டின் அடிப்படையில் உருவானதாகும்; தொல்காப்பியர் கருத்துக்கு எதிரானதாகும். 'தமிழகத்தில் நால்வகை வருணப் பாகுபாடு இடம் பெறாத தொன்மைக் காலத்தில் வாழ்ந்த ஆசிரியர் தொல்காப்பியனார் தமிழ் மக்களை நிலவகையால் பகுத்துரைத்ததல்லது குலவகையால் பகுத்துரைத்தாரில்லை. தமிழ்நாட்டை ஆண்ட முடியுடை வேந்தர் மூவருமே என்பதனை 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்னும் தொல்காப்பியத் தொடரால் நன்குணரலாம். 'கீழோர்' என்றது அம் மூவேந்தரது ஆட்சியின் கீழ், வாழ்ந்த குடிமக்கள் எல்லோரையும் குறித்ததாகும்.[37]

## தமிழர் திருமணமும் ஆரியர் திருமணமும்

ஓர் ஆணும் பெண்ணும் பிறர் தூண்டுதலின்றி இயற்கையாகத் தாமே எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் விரும்பிக் காதல் கொண்டு பிறர் அறியா வண்ணம் களவு வாழ்க்கையில் சிறிது காலம் கழித்துப் பின்னர் பெற்றோர் ஒப்புதலுடன் ஊரார் முன்னிலையில் அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவர், இத் திருமணத்தில் பார்ப்பனர்க்கு இடமில்லை, பெண்களே முன்னின்று எளிமையான முறையில் திருமணத்தை நடத்தி வைப்பர். (அகம்-66,86) இதற்குப் பெயர்தான் கரணம் என்பது. பெற்றோர் உடன்படாத நிலையில் காதலர் இருவரும் உடன்போக்கில் சென்று வேறோர் இடத்தில் சிலர் முன்னிலையில் அல்லது தாங்களோ பூமாலை மாற்றிக் கரணத்தை நிறைவேற்றிக்

கொள்வர். இத்தகைய இயற்கையான, சிறப்பு வாய்ந்த திருமணமுறை கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை நீடித்தது. இதன் பின்னர் ஆரியர் வருகையும் ஆதிக்கமும் அதிகரித்தபோது, தமிழர் வீட்டுத் திருமணங்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் பார்ப்பனர் உள்ளே புகுந்துவிட்டனர். இதற்குக் கோவலன் - கண்ணகி திருமணமே முதல் சான்றாக அமைந்துள்ளது.

*சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்*
*மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்*
*தீவலம் செய்வது காண்பார்....*

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

சிறப்பு மிக்க தமிழர் திருமணத்தை (கரணத்தை) ஆரியரின் திருமணத்தோடு தொல்காப்பியர் ஒப்பிட்டுத் தமிழர் திருமணத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார்.

**ஆரியர் திருமணம் எட்டுவகை:**

ஆரியர்களின் திருமணம் எட்டு வகைப்படும். அவை பிரமம், பிரசாபத்தியம் ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாகும்.

இவற்றுள் பிரமமாவது, ஒத்த கோத்திரத்தானாய், நாற்பத்து எட்டாண்டு பிரமச்சரியங்காத்தவனுக்குப் பன்னீராண்டுப் பருவத்தினளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்துமுன்னர் அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது.

பிரசாபத்தியம் என்பது, மகள் கோடற்குரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டித் தம் மகட்கு ஈந்து கொடுப்பது,

ஆரிடம் என்பது, தக்கான் ஒருவனுக்கு ஆவும் (பசுவும்) ஆனேறும் (காளையும்) பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறுவி பொன் அணிந்து (பெண்ணை) நீர் வார்த்துக் கொடுப்பது,

தெய்வம் என்பது, பெருவேள்வி செய்வோர் பலருள் ஒத்த ஒருவனுக்கு, அவ் வேள்வித் தீ முன்னர் பெண்ணைத் தக்கிணையாகக் கொடுப்பது.

அசுரம் என்பது, கொல்லேறு கோடல் வில்லேற்றுதல் திரிபின்றி எய்தல் முதலியன செய்து பெண் கொள்ளுதலாகும்.

இராக்கதம் என்பது பெண்ணின் விருப்பமின்றி, அவள் பெற்றோர் உடன்படாத நிலையில் அவளை வலிந்து வன்முறையால் மணம் செய்து கொள்வது.

பைசாசம் என்பது, மூத்தோரை, கள்ளுண்டு களித்து மயங்கிக் கிடப்போரை, உறங்கிக் கொண்டிருப்போரை வன்புணர்ச்சி செய்தல்'. இழிந்தவளை மணம் செய்தல்; தான் விரும்பிய பெண்ணை அவளது காதலனது உடை, போலணிந்து மாறு வேடத்தில் சென்று வஞ்சித்து அவளைக் கூடுதல். (அகலிகை - இந்திரன் கதை இதற்குச் சான்று).

கந்தருவம் என்பது, கந்தருவ குமாரரும் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கண்டு இணைந்தது போலத் தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது.[38]

ஆரியரின் இத்தகைய திருமண முறைகளைத் தமிழ் மக்களின் மணமுறையோடு இணைத்துக் கரணம் என்பது வேதங்களோடு ஒன்றியது என்றும், இதனைப் பார்ப்பனர் யாத்தனர் (உருவாக்கினர்) என்றும் கூறும் நச்சினார்க்கினியர் என்னும் பார்ப்பனர் தமிழுக்கும் தமிழர்க்கும் எவ்வளவு பெரிய கேட்டினைச் செய்துள்ளார் என்பதனை ஆய்வாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் தமிழ் மொழியில் சமற்கிருதச் சொற்களையும் எழுத்துகளையும் அப்படியே எழுதக்கூடாது என்றும்

அவற்றைத் தமிழ் வரிவடிவத்திலேயே எழுதவேண்டும் என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்[39] இது ஆரியக் கலப்பை எதிர்த்துத் தமிழின் தனித் தன்மை வாய்ந்த மரபுகளைக் காப்பதற்காகத் தொல்காப்பியர் தொடங்கிவைத்த தமிழ்க் காப்பு இயக்கத்தின் முதல் நடவடிக்கையாகும்.

இவ்வாறு தமிழ்மக்களின் வாழ்வியல் கூறுகளை வடமொழி வேதங்களோடு இணைத்து கலப்படம் செய்து மாசுபடுத்திவந்த ஆரியப் பார்ப்பனியத்தைப் பெரியார் அம்பலப்படுத்தித் தொல்காப்பியத்திலும்ஆரியக்கோட்பாடுகள் புகுத்தப்பட்டுள்ளன[40] என்பதனை எடுத்து முழங்கிய பிறகுதான் நாவலர் சோமசுந்தரபாரதியார், இலக்குவனார், வெள்ளைவாரணனார், தமிழண்ணல் போன்ற தமிழறிஞர்கள் தொல்காப்பியத்தை நுணுகி ஆராயத் தொடங்கினார்கள்.

தமிழ்நாட்டின் அறிவுக் களஞ்சியங்களாக விளங்கிய சான்றோர்களைப் பார்ப்பனர் என்றோ (அல்லது) பார்ப்பனர்க்குப் பிறந்தவர் என்றோ (அல்லது) வடக்கிலிருந்து வந்த வேதியர் என்றோ பொய்யான கதைகளைப் புனைந்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இழிவு படுத்திவந்துள்ளனர். தந்தை பெரியார் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட காலத்தில் தொன்மைத் தமிழ் நூல்களையெல்லாம் நடுநிலைப் பார்வையோடு திறனாய்வு செய்தார். அதனால் தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்ற தொன்னூலாசிரியர் மீது புனையப்பட்டிருந்த ஆரியப் புனைகதைகள் அம்பலமாயின, தந்தை பெரியார் தமிழ் இலக்கியங்களை முதன்முதலில் திறனாய்வு செய்த முதல் திறனாய்வாளர் என்ற பெருமைக்குரியவரானார். தமிழறிஞர்களுக்குப் புதிய வெளிச்சம் கிடைத்தது.

திராவிடத் தொல்குடி மக்களின் தாய்மொழியான தமிழ் "சிவனால் படைக்கப்பட்டது; குடத்தில் பிறந்த குறுமுனியான ஆரிய வேதியன் அகத்தியன் என்பான் அதற்கு இலக்கணம் எழுதிக் கொடுத்துத் தமிழை வளர்த்தான்; திரணதூமாக்கினி எனும் தொல்காப்பியர் வடக்கேயிருந்து அகத்தியனுடன் வந்த பார்ப்பனர்; அவர்வடமொழி இலக்கணத்தை ஒட்டியே தமிழுக்குத் தொல்காப்பியம் செய்து கொடுத்தார். அவர் அகத்தியரின் மாணவர்" என்னும் கருத்துகளை அறிவியலும் மொழியியலும் வரலாறும் இன்று முற்றிலுமாக முறியடித்துவிட்டன. தொல்காப்பியம் பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் நூல் என்பது நிறுவப்பட்ட உண்மையாகிவிட்டது, பெரியாரியம் இதற்குப் பெரிதும் பயன்பட்டது,

தொல்காப்பியத்திலும் ஆரியக் கருத்துகள் புகுத்தப்பட்டுள்ளன என்று தந்தை பெரியார் கூறிய பிறகுதான் தமிழறிஞர்கள் தொல்காப்பியத்தில் பார்ப்பனர் கை வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்தார்கள் தொல்காப்பியத்தில் எங்கெல்லாம் பார்ப்பனர் இடைச் செருகல் செய்துள்ளனர் என்பதைக் கண்டறிந்து எடுத்துக் காட்டினார்கள். தமிழ்ச் சான்றோர்களின் கருத்துகளைத் திரித்தும். மறைத்தும் இடைச் செருகல் செய்தும் பல வஞ்சக வேலைகளை ஆரியம் செய்திருக்கிறது.. வந்தேறிகளை வரவேற்று வாழ வைத்த தமிழினத்தின் சான்றோர்களை வஞ்சக வழிகளால் ஆரியம் வீழ்த்த நினைத்தது, ஆனால் பெரியார்' என்னும் பேரொளி தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாக நின்று அவர்களைக் காத்து வருகின்றது.

**அடிக்குறிப்புகள்**


1. *Luniya .... .... .... Life and culture in Ancient India; P.373*
2. *A.L.Basham .... .... The wonder that was India; P. 86; (1988)*
3. *R.C.Majumdhar .... .... The Age of Imperial Unity; (The History and culture of the people); P.90; (1980)*
4. *K.A.NilaKantasastri... A History of South India; P.144 (1992)*
5. *Prof Devanesan.... A History of Tamilnadu; PP. 97-98*
6. *டாக்டர் கே.கே.பிள்ளை தமிழக வரலாறு (மக்களும் பண்பாடும்); பக். 173-174 (1972)*
7. *மயிலை சீனி.வேங்கடசாமி களப்பிரர் ஆட்சியில் தமிழகம்; பக். 66-67 (2006)*
8. *டாக்டர் கே.கே.பிள்ளை மு.நூ; பக்.298-301*
9. *மேலது... .... மேலது; ப. 314*
10. *மேலது .... ..... மேலது; ப. 318, 322*
11. *டாக்டர் மு.ஆரோக்கியசாமி (சென்னைப் பல்கலைக் கழகம்) தமிழ்நாட்டு வரலாறு ப.66 (1958)*
12. *தி.வை. சதாசிவ பண்டாரத்தார் பிற்காலச் சோழர் வரலாறு, ப.76 (1974)*
13. *தமிழண்ணல் தொல்காப்பியர். ப.27; (2001) (சாகித்திய அகாடெமி வெளியீடு)*
14. *புலவர் ப.இராமநாதபிள்ளை தொல்காப்பியம்; எழுத்ததிகாரம்; இளம்பூரணம்; ப.9 (1947)*
15. *பேரா. கு. சுந்தரமூர்த்தி தொல்காப்பியம்; சொல்லதிகாரம்; நச்சி-உரை; ப.8 (1962)*
16. *நச்சினார்க்கினியர் தொல். எழுத்து; நச்சி உரை; பக்.10-11 (1972); பாயிர உரை*
17. *அரசஞ்சண்முகனார் 'தொல்காப்பியச் சண்முகவிருத்தியின் முதற்பகுதியாகிய பாயிரவிருத்தி (1905) பக்.2; 105*
18. *புலவர் ப.இராமநாதபிள்ளை தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், இளம்பூரணம்; ப.9 (1974)*
19. *தொல்காப்பியர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம்; (இளம்) நூன்மரபு; 1-4 (1974)*
20. *மேலது தொல்; பொருளதிகாரம்; அகத்திணை - இயல் 3-5; இளம்; (1954)*
21. *மேலது மரபியல் 71*
22. *மேலது மரபியல் 71-85*
23. *க.வெள்ளைவாரணன் தொல்.மரபியல் உரைவளம்; பக்.97-98 (1994)*
24. *முனைவர் தமிழண்ணல் தொல். பொருளதிகாரம்; தொகுதி 3; ப.137; (2003)*
25. *இரணியன் சங்க இலக்கியத்தில் சமூக அறம்; ப.78 (டிசம்பர் 2017)*
26. *K. Kothandapanipillai Thirukkural Kamathuppal; pp.47-48 (1962) University of Madras Tholkappiar was no doubt, Scientific in his research, but he was more factual than axiomatic in his work. He had travelled through out the Tamil country observed, verified and collected facts not only those relating to linguistics but also those pertaning to the sex life (பொருள்). This is confirmed by the preface to Tholkappiam written by Panombaranar. By his patient research Tholkappiar had left us a vast store of reliable materials. (1962)*
27. *லோ. சுப்பிரமணியன் சிந்தனையாளர் தொல்காப்பியர்; பக். 10-11 (1966)*
28. *பாரதியார் பாரதியார் கட்டுரைகள் ப.46, (1981)*

29. தி.தெ.சை.சி.நூ.க
இறையனார் அகப்பொருள் உரை

30. அரசஞ் சண்முகனார் மு.நூ. ப.103-104 (1905)

31. பாரதிதாசன் - பாரதிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதி; பக்.109-113; (1964)

32. தந்தை பெரியார் “விடுதலை” 10.11.1948

33. கி.வீரமணி (தொ.ஆ) பெரியார் களஞ்சியம்; தொகுதி 37; திருக்குறள் - வள்ளுவர்;
ப.273; (2015)

34. நச்சினார்க்கினியர் தொல்காப்பியம், கற்பியல், உரைவளம், ப.3, ம.கா.பல்கலை (1983)

35. க.வெள்ளைவாரணனார் தொல்காப்பியம், கற்பியல், உரைவளம் ப.14 (1983)

36. மேலது மேலது; பக். 33-34

37. மேலது மேலது ப.10

38. நச்சினார்க்கினியர் தொல்காப்பியம், களவியல் நூல் 1, உரை

39. தொல்காப்பியர் தொல்காப்பியம்; எச்சவியல்; நூ.5

40. தந்தை பெரியார் ’விடுதலை’ 28.03.1960

**ஆசிரியர் குறிப்பு:**

*பேராசிரியர் காளிமுத்து, பழனிக் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மொழிப்போர் வீரர். தமிழும் ஆங்கிலமும் துறை போகியவர். சங்கத்தமிழின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். பல ஆய்வுக் கட்டுரைகளின் ஆசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் விளங்குகிறார். நெருக்கடிநிலைக் காலத்தில் தம் பேராசிரியர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு பழிவாங்கப்பட்டவர்.*

*அய்யா காளிமுத்து, திராவிடர் வரலாற்று ஆய்வு மய்யத்தின் செயற்குழு உறுப்பினர். 1970இல் பகுத்தறிவாளர் கழகம் தொடங்கப்பட்ட போது அதன் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். 'குறிப்புப்பொருள் கோட்பாடுகள்' என்பது இவரது முதல் நூலாகும். மனு ஸ்மிருதி சாத்திரத்தை ஆய்வு செய்து 'மனுநீதி -ஒரு மறுபார்வை' என்ற நூலை எழுதியவர்.*

*'3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தியா', 'உலகத் தத்துவச் சிந்தனையாளர்களும் தந்தை பெரியாரும் - ஓர் ஒப்பியல் ஆய்வு', 'சிவாஜி முடிசூட்டலும் பார்ப்பனீயமும்' போன்ற நூல்களையும், 'மாட்டுக்கறியும் மதவெறியும்', 'காந்தியார் படுகொலை: அதிர்ச்சியூட்டும் தகவல்' போன்ற நூல்களின் முக்கியப் பகுதிகளையும் தமிழில் மொழிபெயர்த்தவர்.*

■